# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 4 / 2022** **நாள்: 19.01.2022**

**நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடத்துவது குறித்து, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்தாலோசனைக் கூட்டம் இன்று 19.01.2022 நடைபெற்றது.**

தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள் என அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நடைபெறவுள்ள தேர்தல்களுக்காக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ.பழனிகுமார், இ.ஆ.ப., (ஓ) அவர்கள் தலைமையில் இன்று (19.01.2022) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அகில இந்திய திரிணாமூல் காங்கிரஸ், பகுஜன் சமாஜ் கட்சி, பாரதீய ஜனதா கட்சி, இந்திய கம்னியூஸ்ட் கட்சி, இந்திய கம்னியூஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), தேசிய முற்போக்கு திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சி மற்றும் தேசிய மக்கள் கட்சி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

..2..

மேற்படி கூட்டத்தில், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேரம், வாக்குப்பதிவினை எத்தனைக் கட்டங்களாக நடத்துவது மற்றும் தேர்தலின்போது கோவிட் -19 பரவாமல் இருக்க நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடிப்பது குறித்து அரசியல் கட்சிகளின் கருத்துக்கள் கேட்கப்பட்டது.

இறுதியாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ.பழனிகுமார், இ.ஆ.ப., (ஓ) அவர்கள் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்கள் ஆணையத்தால் பரிசீலிக்கப்படும் என்றும், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை அமைதியாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடத்திட அனைத்து அரசியல் கட்சிகளும் தங்களது ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். கோவிட் -19 பரவலை தடுக்கும் விதத்தில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு மேற்படி கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர். இரா.செல்வராஜ், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) திரு.விசுமகாஜன், இ.ஆ.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி. கு.தனலெட்சுமி, முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு.கி.அ.சுப்பிரமணியம், உதவி ஆணையர் (தேர்தல்) திரு. அகஸ்ரீ சம்பத்குமார் மற்றும் ஆணைய அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

19/1/2022

மக்கள் தொடர்பு அலுவலர்